**செய்தி வெளியீடு எண் : 2219** **நாள் : 06.11.2023**

**எம். டி. (யோகா & இயற்கை மருத்துவம்) – மருத்துவப் பட்ட மேற்படிப்பு**
**2023 – 2024ஆம் கல்வியாண்டு**

சென்னை–600 106, அரசினர் யோகா & இயற்கை மருத்துவக் கல்லூரி & மருத்துமனையில் மற்றும் செங்கல்பட்டு, சர்வதேச யோகா & இயற்கை மருத்துவம் அறிவியல் நிறுவனத்தில் 2023–2024ஆம் கல்வியாண்டிற்கான மூன்றாண்டு எம். டி. (யோகா & இயற்கை மருத்துவம்) பட்ட மேற்படிப்பிற்கென மொத்தமுள்ள 45 இருக்கைக்களுக்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. **விண்ணப்பங்கள் இவ்வாணையரகத்திலோ, தேர்வுக்குழு அலுவலகத்திலோ வழங்கப்படமாட்டாது.** மேலும், அடிப்படைத்தகுதி, நுழைவுத்தேர்வு கால அட்டவணை, தரவரிசை, கலந்தாய்வு அட்டவணை மற்றும் பிற விவரங்களுக்கு "www.tnhealth.tn.gov.in." என்ற வலைதளமுகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

- **விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பினை** "www.tnhealth.tn.gov.in." என்ற சுகாதாரத் துறையின் வலைதள முகவரி மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பினை **07.11.2023 முதல் 17.11.2023 பிற்பகல் 05.00 மணி வரை** பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: **17.11.2023 மாலை 05.30 மணி வரை.**
- **விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பினை** பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விருப்பப்படிவத்துடன் கூடிய விண்ணப்பப் படிவத்தோடு கேட்கப்பட்டுள்ள அனைத்துச் சான்றிதழ்களின் சுய சான்றொப்பம் இடப்பட்ட நகல்களையும் இணைத்து அனுப்பவேண்டிய முகவரி:

  **செயலர், தேர்வுக்குழு,**
  **இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகம்,**
  **அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை வளாகம்,**
  **அரும்பாக்கம், சென்னை – 600 106."**

- 17.11.2023 மாலை 05.30 மணிக்குள் தபால் அல்லது கூரியர் சேவையின் மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்க வேண்டும். அஞ்சல் துறையினரால் மற்றும் கூரியர் நிறுவனத்தால் ஏற்படும் காலதாமதம் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- **விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பிற்கான கட்டணம்: ரூ.3000/–**
- இக்கட்டணத்தை **எஸ்.பி.ஐ. இ–சேவை** எனும் இணையதள சேவையின் வாயிலாக செலுத்தி அதற்குரிய பணப்பரிமாற்ற குறியீட்டு எண்ணினை அதற்குரிய ரசீதினையும் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிப்பதன் மூலமாக உரிய விண்ணப்பக்கட்டணத்தினை செலுத்தியதாக கருதப்படும்.
- அஞ்சல் துறையினரால் மற்றும் கூரியர் நிறுவனத்தால் ஏற்படும் காலதாமதம் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- மேலும் விவரங்களுக்கு, இணையதள முகவரி: http/www.tnhealth.tn.gov.in.

**ஆணையர்,**
**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை,**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in